# TNUSRB TRAINING PROGRAMME 2025
## TEST I – தமிழ் தகுதித்தேர்வு

1. பிரித்தெழுதுக:
   பொய்யகற்றும் - பிரித்தெழுதுக
   a. பொய் + அகற்றும்  b. பொய் + கற்றும்
   c. பொய்ய + கற்றும்  d. பொய் + யகற்றும்

2. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
   உயர்திணைக்குரியதல்லாத பால்வகைக் கண்டறிக.
   a. ஆண்பால்  b. பெண்பால்  c. பலவின்பால்  d. பலர்பால்

3. அருகில் – எதிர்ச்சொல்லைக் கண்டறிக
   a. மிசை  b. தொலைவில்  c. அண்மையில்  d. பக்கத்தில்

4. மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக:
   a. சோறு சாப்பிட்டான்  b. பால் குடித்தான்
   c. அம்பு விட்டான்  d. கூடை முடைந்தான்

5. "அணுகு" – என்பதன் எதிர்ச்சொல் எழுதுக.
   a. அருகில்  b. விலகு  c. தொலைவு  d. பருகு

6. மரபு பிழையற்றதை எடுத்து எழுதுக:
   a. எருது எக்காளமிடும்  b. கோழி கூவும்
   c. மயில் அலறும்  d. காகம் கத்தும்

7. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்
   Continent - என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்
   a. கண்டம்  b. வலசை  c. வானிலை  d. புகலிடம்

8. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக.
   'Conversation'
   a. உரையாடல்  b. கலந்துரையாடல்  c. சொற்பொழிவு  d. பட்டிமன்றம்

9. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக
   'Orthography'
   a. சொல்லிலக்கணம்  b. எழுத்திலக்கணம்
   c. பொருளிலக்கணம்  d. யாப்பிலக்கணம்

10. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.
    வடு, மூசு, குரும்பை, கச்சல் ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

a. பிஞ்சு வகை b. காய் வகை c. கனி வகை d. குலை வகை

11. ஒரு பொருள் தரும் பல சொற்கள்
"வயல்"
a. பழனம், செய் b. காணி, விசும்பு c. தரிசு, தீ d. சுடர், கழனி

12. 'MIGRATION' என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல்லைத் தேர்க
a. சரணாலயம் b. வானிலை c. நகர்தல் d. புகலிடம்

13. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க
a. நாக்கு; நைடதம்; நொய்யல்; நோன்பு b. நைடதம்; நாக்கு; நொய்யல்; நோன்பு
c. நோன்பு; நைடதம்; நாக்கு; நொய்யல்; d. நொய்யல்; நோன்பு; நைடதம்; நாக்கு

14. அகரவரிசைப்படி சொற்களை சீர் செய்க
a. சோலை, சுறும்பு, சாந்தம், சைலம் b. சுறும்பு, சாந்தம், சைலம், சோலை
c. சாந்தம், சுறும்பு, சைலம், சோலை d. சைலம், சோலை, சுறும்பு, சாந்தம்

15. "உனக்குக் கதை எழுதத் தெரியுமா?" என்ற வினாவிற்கு "கட்டுரை எழுதத் தெரியும்" என்று விடை கூறுவது.
a. இனமொழி விடை b. ஏவல் விடை
c. உறுவது கூறல் விடை d. உற்றது உரைத்தல் விடை

16. காமராசர் நகர் எங்கே இருக்கிறது? என்ற வினாவிற்கு, "இந்த வழியாகச் செல்லுங்கள்" என்று விடையளிப்பது?
a. நேர் விடை b. சுட்டு விடை
c. மறை விடை d. உற்றது உரைத்தல் விடை

17. பிரித்தெழுதுதல்:
செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது
a. செந் + தமிழ் b. செம் + தமிழ்
c. சென்மை + தமிழ் d. செம்மை + தமிழ்

18. செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் - கண்டெழுதுதல்
குமரன் ஓவியம் வரைந்தான்
a. செய்வினை வாக்கியம் b. செயப்பாட்டு வினை வாக்கியம்
c. பிறவினை வாக்கியம் d. எதிர்மறை வாக்கியம்

19. "Territory" - இணையான தமிழ் சொல் அறிக
a. நீர்ப்பகுதி b. கண்டப்பகுதி c. நிலப்பகுதி d. பனிப்பிரதேசம்

20. ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் அறிக
Adulteration

a. கடற்பயணம் b. பயணப் படகுகள்
c. தொழில் முனைவோர் d. கலப்படம்

21. தவறான ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.
a. தஞ்சை – தஞ்சாவூர் b. நெல்லை – திருநெல்வேலி
c. மயிலை – மயிலாடுதுறை d. புதுகை – புதுக்கோட்டை

22. நிறுத்தற்குறி அறிக. (எது சரியானது)
a. கூட்டத்தின் தலைவர் "சக்தி அவர்கள் அப்போது தலைப்பில்லை என்னும் தலைப்பில் பேசுவார்" என்று அறிவித்தார்.
b. கூட்டத்தின் தலைவர் சக்தி அவர்கள் இப்போது "தலைப்பில்லை" என்னும் தலைப்பில் பேசுவார் என்று அறிவித்தார்.
c. கூட்டத்தின் தலைவர் "சக்தி அவர்கள் இப்போது, 'தலைப்பில்லை' என்னும் தலைப்பில் பேசுவார்" என்று அறிவித்தார்.
d. கூட்டத்தின் தலைவர் 'சக்தி' அவர்கள் இப்போது, "தலைப்பில்லை என்னும் தலைப்பில் பேசுவார்" என்று அறிவித்தார்.

23. சரியான நிறுத்தற்குறிகளுடன் அமைத்த வாக்கியத்தைக் கண்டறிக.
a. வெண்பாவால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம் : மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டியர் என்று பொதுவாகப் பாடுகிறது.
b. வெண்பாவால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம்; மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டியர் என்று பொதுவாகப் பாடுகிறது.
c. "வெண்பாவால் எழுதப்பட்ட நூல் 'முத்தொள்ளாயிரம்'. மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டியர் என்று பொதுவாகப் பாடுகிறது.
d. 'வெண்பா' வால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம் மன்னர்களின் பெயர்களை குறிப்பிடாமல் சேர, சோழ பாண்டியர் என்று பொதுவாகப் பாடுகிறது.

24. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கு
பசு – சரியான சொல்
a. கன்று b. குட்டி c. பறழ் d. குருளை

25. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
சுவர் - சரியான சொல்
a. கட்டினான் b. அமைத்தான் c. உண்டாக்கினான் d. எழுப்பினான்

26. அடைப்புக்குள் உள்ள சொல்லை தகுந்த இடத்தில் சேர்க்க (மதலை)
a. ஏணி சாத்திய ___________ b. வானம் ஊன்றிய ___________
c. இரவில் மாட்டிய ___________ d. கானம் பாடிய ___________

27. அடைப்புக்குள் உள்ள சொல்லை தகுந்த இடத்தில் சேர்க்க (தனது)
a. தலைவர் ___________ கையால் பரிசு வழங்கினார்.
b. மாணவன் ___________ கையால் பரிசு பெற்றுக்கொண்டான்

c. மாடுகள் ____________ தலையை ஆட்டின.

d. தலைவர் ___________ வீட்டை வழங்கினார்

28. குறில் நெடில் பொருள் வேறுபாடறிந்து சரியான விடையைத தெரிவு செய்க.
பாரி - பரி

a. தலைவன் - கழுதை
b. வீரன் - பரித்துக்கொள்
c. வள்ளல் - குதிரை
d. மாரி – குதிரை

29. கலைச்சொல் அறிக.
Cosmic Rays

a. விண்வெளிக் கதிர்கள்
b. பால்வீதி மண்டலம்
c. புறஊதாக் கதிர்கள்
d. விண் எறிக்கல்

30. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.

A. ஈன்று 1. கிளை
B. கொம்பு 2. மிகுந்த சுவை
C. அதிமதுரம் 3. கவி
D. குரங்கு 4. பெற்று

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 1 | 2 | 4 | 3 |

31. கட்டளைத் தொடரைக் கண்டறிக.

a. அப்துல் நேற்று வந்தான்
b. அப்துல் நேற்று வருவித்தான்
c. இது நாற்காலி
d. பூக்களைப் பறிக்காதீர்

32. இவ்வரிகளில் உள்ள பொருள்கோளை கண்டறிக
“ஆலத்துமேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு”

a. நிரல்நிறைப் பொருள்கோள்
b. தாப்பிசைப் பொருள்கோள்
c. கொண்டு கூட்டுப் பொருள்கோள்
d. ஆற்றுநீர் பொருள்கோள்

33. சரியான தொடரைத் தேர்ந்தெடு

a. அருந்தும் அருமருந்தென உணவே நம் தமிழ்மக்கள் அறிந்தவர்
b. நம் தமிழ்மக்கள் அருமருந்தென அருந்தும் உணவே அறிந்தவர்
c. அருந்தும் உணவே அருமருந்தென அறிந்தவர் நம் தமிழ்மக்கள்
d. நம் உணவே அருமருந்தென அறிந்தவர் அருந்தும் தமிழ்மக்கள்

34. பொருத்துக.

சொல் பொருள்
A. கழனி 1. கப்பல்
B. சமர் 2. கடல்

C. கலம் 3. போர்

D. ஆழி 4. வயல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 1 | 3 | 4 | 2 |

**கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு (35-39)**

முத்துராமலிங்கர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். தமது பேச்சாற்றலால் ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களிடம் பெரும் எழுச்சியை ஏற்படுத்தினார். மேடைகளில் அவர் ஆற்றிய வீர உரையைக் கேட்ட மக்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக வீறு கொண்டு எழுந்தனர். ஆதனால் அச்சமடைந்த ஆங்கில அரசு பலமுறை அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. மேலும் வாய்ப்பூட்டுச் சட்டம் மூலம் மேடைகளில் அரசியல் பேசக்கூடாது என்று அவருக்குத் தடை விதித்தது. வட இந்தியாவில் வாய்ப்பூட்டுச் சட்டத்தின்படி பேசத் தடை விதிக்கப்பட்ட தலைவர் பாலகங்காதர திலகர். அவரைப் போலவே தென்னாட்டில் அச்சட்டத்திற்கு ஆட்பட்ட தலைவர் முத்துராமலிங்கர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது விடுதலை வேட்கையை அறிந்த திரு.வி. கலியாணசுந்தரனார் தேசியம் காத்த செம்மல் என்று பாராட்டிஉள்ளர். வங்கச் சிங்கம் என்று போற்றப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திர போசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

35. விடுதலைப் போரில் பங்கேற்றவர்
a. கந்தன் b. முத்து இராமலிங்கர் c. நாதன் d. பாலன்

36. அவர் உரையைக் கேட்ட ஆங்கில அரசு செய்த செயல்
a. சிறையில் அடைத்தது b. பரிசு அளித்தது
c. பதக்கம் அளித்தது d. பாராட்டியது

37. மேடைகளில் அரசியல் பேசக் கூடாது என்று தடை விதிக்கப்பட்ட சட்டம்
a. 144 சட்டம் b. இல்லப்பூட்டுச் சட்டம்
c. வாய்ப்பூட்டுச் சட்டம் d. சொத்துரிமை மறுப்புச் சட்டம்

38. தேசியம் காத்தம் செம்மல் என்று முத்துராமலிங்க தேவரை பாராட்டியவர்?
a. திரு.வி.கலியாணசுந்தரனார் b. பாரதியார்
c. சர்.சி.வி இராமன் d. பாரதிதாசன்

39. வங்கச் சிங்கம் என்று பாராட்டப்படுவர்?
a. திருப்பூர் குமரன் b. சுப்ரமணிய சிவா
c. திலகர் d. நேதாஜி சுபாஷ் சந்திரபோசு

40. பெய்த மழை - இலக்கணக் குறிப்புத் தருக.
a. வினைமுற்று b. பெயரெச்சம் b. வினையெச்சம் d. உரிச்சொல்

41. ஒரு – ஓர் எனும் சொற்கள் சரியாக அமைந்து தொடரைத் தேர்க.
a. ஓர் ஊரில் ஒரு பாட்டி வசித்தாள் b. ஓர் ஊரில் ஓர் பாட்டி வசித்தாள்

c. ஒரு ஊரில் ஒரு பாட்டி வசித்தாள் d. ஒரு ஊரில் ஓர் பாட்டி வசித்தாள்

42. ஒருமை – பன்மை பிழையற்றத் தொடர் எது?
a. மேகங்கள் சூழ்ந்து கொண்டன b. மேகங்கள் சூழ்ந்து கொண்டது
c. விண்மீன்கள் வானில் தோன்றியது d. செடி, கொடிகள் மழையில் நனைந்தது

43. சரியான தொடரைத் தேர்ந்தெடு:
என்னே இமய மலையின் உயரம்! - இது எவ்வகைத் தொடர்?
a. வினாத் தொடர் b. உணர்ச்சித் தொடர்
c. கட்டளைத் தொடர் d. செய்தித் தொடர்

44. கூட்டுப்பெயரைத் தெரிவு செய்க.
வைக்கோல்
a. குவியல் b. போர் c. மூட்டை d. பொதி

45. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல்.
புலியின் இளமைப்பெயர் _________
a. குருளை b. குட்டி c. பறழ் d. கன்று

46. பொருத்தமான பொருளைத் தெரிவு செய்க.
"உப்பிட்டவரை உள்ளளவும் நினை"-
பழமொழி கூறும் பொருள் தெளிக.
a. நட்பு பாராட்டல் b. நன்றி மறவாமை
c. ஒற்றுமை d. இரக்கம் காட்டல்

47. நிறுத்தற்குறிகள் சரியாக அமைக்கப்பட்ட தொடரைத் தேர்க.
a. இருதிணை : உயர்திணை, அஃறிணை.
b. இருதிணை – உயர்திணை, அஃறிணை.
c. 'இருதிணை' – உயர்திணை; அஃறிணை.
d. இருதிணை : "உயர்திணை, அஃறிணை.

48. "எனக்கு எழுதித் தருகிறாயா?" என்ற வினாவிற்கு, "எனக்கு யார் எழுதித் தருவார்கள்?" என்று விடையளிப்பது.
a. உறுவது கூறல் விடை b. மறை விடை
c. வினா எதிர் வினாதல் விடை d. உற்றதுரைத்தல் விடை

49. அலுவல் சார்ந்த சொற்கள் (கலைச்சொல்)
Electronic devices
a. மின்னனுக் கருவிகள் b. காணொலிக் கூட்டம்
c. மின்சாரக் கருவிகள் d. மின்னச்சுக் கருவிகள்

50. அலுவல் சார்ந்த கலைச்சொற்கள்
Launch Vehicle - என்பதன் தமிழ்ச்சொல்லைக் கண்டறிக.

a. ஏவுகணை b. செயற்கைக்கோள் c. ஏவு ஊர்தி d. வானூர்தி

51. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.
ஐராவதீசுவரர் கோவில் இரண்டாம் இராசராச சோழனால் கட்டப்பட்டது.
a. ஐராவதீசுவரர் கோவில் எதனால் கட்டப்பட்டது?
b. ஐராவதீசுவரர் கோவில் யாரால் கட்டப்பட்டது?
c. ஐராவதீசுவரர் கோவில் எங்கு கட்டப்பட்டது?
d. ஐராவதீசுவரர் கோவில் எப்படி கட்டப்பட்டது?

52. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்
'மூதுரை' என்னும் நூலை எழுதியவர் ஔவையார்.
a. ஔவையாரின் நூலா மூதுரை?
b. மூதுரையை ஏன் எழுதினார்?
c. மூதுரை என்னும் நூலை எழுதியவர் யார்?
d. மூதுரையை ஔவையார் எழுதினாரா?

53. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்.
மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது.
a. பறவை இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது.
b. வாழ முடியாது மனிதன் இல்லாத உலகில் பறவை.
c. மனிதன் பறவை வாழ முடியாது இல்லாத உலகில்.
d. இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது பறவை.

54. வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயர் காண்க
பாடு
a. பாடுதல் b. பாடுக c. பாடிய d. பாடியவள்

55. வேர்ச்சொல்லைக் கொடுத்து வினைமுற்று உருவாக்கல்
கேள்
a. கேட்ட b. கேட்டு c. கேட்டான் d. கேட்கிற

56. "அணி" எனும் சொல் தரும் பலபொருள்களைத் தேர்க
a. அணிகலன், அழகு, வரிசை, அணிதல் b. சிரிப்பு, நகை, மகிழ்ச்சி, துன்பம்
c. வரிசை, அழகு, சிரிப்பு, அழுகை d. அழகு, சிரிப்பு, வரிசை, இன்பம்

57. மரபுப் பிழை நீக்கிச் சரியானதைத் தேர்க
சோறு தின்றான்
a. உண்டான் b. சாப்பிட்டான் c. அருந்தினான் d. விழுங்கினான்

58. பொருந்தாத சொல்லைத் தேர்க
முற்றியலுகரம்
a. பசு b. விடு c. ஆறு d. கரு

59. சில்காற்று என்பதன் எதிர்ச்சொல்
a. தென்றல் b. சிறுகாற்று c. சிலகாற்று d. புயல்

60. பிரித்தெழுதுக
செம்பயிர்
a. செம்மை + பயிர்
b. செம் + பயிர்
c. செமை + பயிர்
d. செம்பு + பயிர்

61. பிரித்து எழுதுக
'நீளுழைப்பு' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக் கிடைப்பது
a. நீளு + உழைப்பு
b. நீண் + உழைப்பு
c. நீண்ட + உழைப்பு
d. நீள் + உழைப்பு

62. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்க்க. (எங்கே)
a. தம்பி __________ வா
b. தம்பி __________ உள்ளாய்?
c. தம்பி __________ வந்தாய்
d. தம்பி __________ உன்னுடையதா?

63. பொருத்தமான காலம் அமைத்தல்.
'வாழ்' என்ற சொல்லின் நிகழ்காலத்தைக் குறிக்கும் சொல்லைத் தேர்ந்தெடு
a. வாழ்வேன் b. வாழ்ந்தான் c. வாழ்கிறேன் d. வாழ்ந்தாள்

64. குறில் நெடில் அடிப்படையில் சரியான இணையைத் தேர்வு செய்க.
a. சே, சோ b. ஆடல், பாடல் c. பெறு, பேறு d. தழல், கழல்

65. கூற்று 1: சென்னையிலும் கும்பகோணத்திலும் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகளில் பயிலலாம்.
கூற்று 2: இக்கலைத்துறையில் மிகுதியான வேலை வாய்ப்புகள் உள்ளன.
கூற்று 3: சிற்பக்கலை குறித்த செய்திகளை அனைவரும் அறிந்துகொள்ள சிற்பச் செந்நூல் என்ற நூல் வெளியிடப்படுகிறன்றது.
a. கூற்று 1, 2, 3 சரி
b. கூற்று 1, 2, 3 தவறு
c. கூற்று 1 மட்டும் தவறு 2, 3 சரி
d. கூற்று 1, 3 சரி, 2 மட்டும் தவறு

66. நாடகக் காப்பியம் என்று அழைக்கப்படும் நூல் எது?
a. சிலப்பதிகாரம் b. மணிமேகலை c. சீவகசிந்தாமணி d. குண்டலகேசி

67. வழிப்பறி, நிரைகவர்தல் ஆகியன ___________ திணைக்குரிய தொழில்கள்.
a. முல்லை b. பாலை c. நெய்தல் d. மருதம்

68. கீழ்க்கண்டவற்றுள் சு.சமுத்திரம் படைப்புகளை மட்டும் தேர்வு செய்க.
a. அழுத கண்ணீர். குருட்டு மேகங்கள், அண்ணபூரணி, நீயும் நானும்
b. ஆனந்தத்தேன், மனசு தாங்காது, ஆலங்கட்டி, தெய்வமனசு
c. வாடாமல்லி, பாலைப்புறா, மண்சுமை, தலைப்பாகை
d. புலரி, முன்பின், ஆதி, அந்நியமற்ற நதி

69. கூத்துப்பட்டறை எனும் நாடகக் குழுவை நடத்தி வந்தவர் யார்?
a. கே.ஏ.குணசேகரன் b. முருகபூபதி c. ந. முத்துசாமி d. மு. ராமசாமி

70. 'திருத்தொண்டர் புராணம்' என்று அழைக்கப்படுவது
a. சீறாப்புராணம் b. கந்தபுராணம்
c. திருவிளையாடற்புராணம் d. பெரியபுராணம்

71. மாகால் - இச்சொல்லிற்கான இலக்கணக் குறிப்பினை எழுதுக.
a. உரிச்சொல் தொடர் b. இடைச்சொல் தொடர்
c. அடுக்குத் தொடர் d. வினையாலணையும் பெயர்

72. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை பொருத்துக

| | |
|---|---|
| A. Storm | 1. பெருங்காற்று |
| B. Tornado | 2. புயல் |
| C. Tempest | 3. சுழல் காற்று |
| D. Whirl wind | 4. சூறாவளி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 1 | 3 | 2 | 4 |
| d. | 4 | 3 | 1 | 2 |

73. மயங்கிய' சரியான வேர்ச்சொல்லை தேர்ந்தெடு
a. மயங்கினான் b. மயங்கிய c. மயங்கு d. மயங்கினாள்

74. கொடுக்கப்பட்ட சொற்களில் தொழில் பெயரை எழுதுக.
a. படித்து b. படித்த c. படித்தல் d. படித்தார்

75. தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர்
a. மூவலூர் இராமாமிர்தம் b. இராஜேஸ்வரி அம்மையார்
d. அஞ்சலையம்மாள் d. அம்புஜத்தம்மாள்

76. "வறிது நிலைஇய காயமும்" என வானத்தில் காற்றில்லா பகுதியைக் கூறும் நூல்
a. பதிற்றுப்பத்து b. புறநானூறு c. ஐங்குறுநூறு d. கலித்தொகை

77. தமிழ் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் இருக்கவேண்டுமென விரும்பி யாருக்கு மு.வ கடிதம் எழுதினார்?

a. தம்பிக்கு b. அண்ணனுக்கு b. ஆட்சியாளருக்கு d. அமைச்சருக்கு

78. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
a. மலையூர் b. காட்டூர் c. மணிப்பூர் d. மருதூர்

79. பின்வரும் தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.
மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை
a. மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை.
b. மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்ல.
c. மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அன்று.
d. மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் இல்லை.

80. குறுந்தொகையின் அடிவரையறை
a. 4 - 8 b. 13 - 31 c. 8 - 16 d. 9 - 12

81. தண்டமிழ் ஆசான் என்று இளங்கோவடிகள் யாரை பாராட்டியுள்ளார்?
a. நாதகுத்தனார் b. தோலாமொழித் தேவர்
c. திருத்தக்கத்தேவர் d. சீத்தலைச்சாத்தனார்

82. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க :
a. உழவு, மண், ஏர், மாடு b. மண், மாடு, ஏர், உழவு
c. உழவு, ஏர், மண், மாடு d. ஏர், உழவு, மாடு, மண்

83. ‘நட’ என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்றைத் தேர்ந்தெடுக்க
a. நடந்தான் b. நடத்தல் c. நடந்து d. நடந்த

84. புத்துயிரூட்டி – பிரித்தெழுதுக.
a. புதுமை + உயிரூட்டி b. புது + உயிரூட்டி
c. புது + மை + உயிரூட்டி d. புதுமை + உயிர் + ஊட்டி

85. ‘மீ’ என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?
a. மாமரம் b. முகர்தல் c. மேலே d. முன்னிலை ஒருமை

86. திராவிடர் என்ற சொல்லை இடைக்காலத்தில் முதன் முதலாக குறிப்பிட்டவர்
a. குமரிலபட்டர் b. கால்டுவெல் c. எல்லீஸ் d. வில்லியம் கேரி

87. தண்மணல் - இலக்கணக் குறிப்பு தருக.
a. பண்புப்பெயர் b. பண்புத்தொகை
c. வினைத்தொகை d. வினைச்சொல்

88. “விழலுக்கு இறைத்த நீர் போல” இவ்வுவமை விளக்கும் பொருள் யாது?
a. பயனுள்ள செயல் b. பயனற்ற செயல்
c. எதிர்பாரா செயல் d. எதிர்பார்த்த செயல்

89. தன் வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை வாக்கியங்களைக் கண்டெழுதுதல் வாக்கிய அமைப்பினைக் கண்டறிக.
கவிதாவால் உரை படிக்கப்பட்டது

a. செய்வினை வாக்கியம்
b. செயப்பாட்டுவினை வாக்கியம்
c. தன்வினை வாக்கியம்
d. பிறவினை வாக்கியம்

90. எதிர்ச் சொற்களைப் பொருத்துக.

A. அணுகு 1. தெளிவு
B. ஐயம் 2. சோர்வு
C. ஊக்கம் 3. பொய்மை
D. உண்மை 4. விலகு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 2 | 1 | 3 | 4 |

91. 'தா' எனும் வேர்ச்சொல்லின் வினையெச்ச சொல் எதுவெனக் கண்டறிக.

a. தருதல் b. தந்த c. தந்தவர் d. தந்து

92. "உழவன்" எதிர்ப்பாலுக்கு உரிய சொல்

a. பரத்தியர் b. உழத்தி c. உழவி d. நுளைச்சி

93. இருவினைகளின் பொருள் வேறுபாடு அறிதல்:
விரிந்தது – விரித்தது
சரியான பொருள் தரும் வாக்கியத்தைக் கண்டறிக.

ய. மழைக்காற்று வீசியதால், பூவின் இதழ்கள் விரிந்தன. மயில் தோகையை விரித்தது.
டி. பூவின் இதழ்கள் மழைக்காற்று வீசியதால் விரித்தது. மயில் தோகையை விரிந்தன.
உ. மழைக்காற்று வீசியதால் பூவின் இதழ்கள் விரித்தது. மயில் தோகையை விரித்தன.
ன. மயில் தோகையை விரிந்தன. மழைக்காற்று வீசியதால் பூவின் இதழ்கள் விரித்தது.

94. குறில் நெடில் மாற்றம், பொருள் வேறுபாடறிந்து சரியான விடையைத் தெரிவு செய்க
நடு, நாடு

a. தேடு, தேசம்
b. ஊன்று, விரும்பு
c. நிலப்பகுதி, தேடு
d. விரும்பு ஊன்று

95. சரியான இணையைக் கண்டறிக:

a. அளை – தயிர், பிசை
b. அளை – பிசை, களை
c. அளை – அழை, மலை
d. அளை - கூவி, அடை

96. 'சமுதாயம்' என்ற வடசொல்லின் சரியான தமிழ்ச்சொல்

a. மன்பதை b. குழாம் c. நெறி d. உண்மை

97. தனிச் சொல்லையோ தனி எழுத்தையோ விளக்கிக் காட்டும் போது _______ இட வேண்டும்

a. அரைப்புள்ளி b. முக்காற்புள்ளி
c. ஒற்றை மேற்கோள் குறி d. இரட்டை மேற்கோள் குறி

98. பகுதி I உடன் பகுதி II ஐப் பொருத்துக.

| பகுதி I | பகுதி II |
|---|---|
| A. குறிஞ்சி | 1. வருணன் |
| B. முல்லை | 2. முருகன் |
| C. மருதம் | 3. திருமால் |
| D. நெய்தல் | 4. இந்திரன் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 4 | 2 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 4 | 1 | 2 | 3 |

99. 'திரைக்கவித் திலகம்' என்ற சிறப்புக்குரியவர்

a. வாலி b. உடுமலை நாராயண கவி
c. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் d. மருதகாசி

100. பொருத்துக:

| | |
|---|---|
| A. க், ங் | 1. நாவின் இடை, அண்ணத்தின் இடை |
| B. ச், ஞ் | 2. நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி |
| C. ட், ண் | 3. நாவின் முதல், அண்ணத்தின் அடி |
| D. த், ந் | 4. நாவின் நுனி, அண்ணத்தின் நுனி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 4 | 2 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 4 | 1 | 2 | 3 |



அறிவுக்கு ஏற்றது, மக்களுக்கு நன்மை பயப்பது, மக்களின் அறிவை வளர்ச்சியடையச் செய்வது எதுவோ அதைப் பற்றியே பேசு.

-தந்தை பெரியார்